## ஒதுக்கீட்டுத் தலைப்பு – 183 – மக்கள் தொடர்பு மற்றும் மக்கள் அலுவல்கள் அமைச்சு

## கணக்காய்வாளர் தலைமை அதிபதி – 2012 ஆம் ஆண்டு

---

### 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

மக்கள் தொடர்பு மற்றும் மக்கள் அலுவல்கள் அமைச்சின் 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கை, இணக்கக் கூற்றுக்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2013 ஒக்டோபர் 10 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகளது, போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தினை கொண்டு காணப்படுகின்றது.

### 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணப்பட்டு வருதல், தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும், இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமான முறையில் சமர்ப்பிக்கப்படுவதற்கு உரியவகையிலான

உள்ளகக்கட்டுப்பாடுகளைத் தயாரித்தல், செயற்படுத்தல் மற்றும் நடாத்தலும் இப் பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 1.3 கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், இளைஞர் விவகார, திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணைக்கக் கூற்று, இதன் (அ) முதல் (ஆ) வரையில் காண்பிக்கப்பட்டுள்ள பொது அவதானிப்புக்கள் மற்றும் 1.4 முதல் 1.8 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புகள் தவிர்ந்தவை, திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

### (அ) ஒதுக்கீட்டுக் கணக்கு

#### (i) மொத்த ஏற்பாடும் செலவும்

மீளாய்வாண்டிற்காக அமைச்சிற்காக மேற்கொள்ளப்பட்ட மொத்த தேறிய ஏற்பாடு ரூபா 160,028,000 ஆனதுடன் ஆண்டின் இறுதியில் இதில் ரூபா 134,333,472 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், தேறிய சேமிப்பு ரூபா 25,694,528 தொகையாகியிருந்ததுடன் இது மொத்த தேறிய ஏற்பாட்டில் 16 சதவீதமாகக் காணப்பட்டது. விபரம் பின்வருமாறாகும்.

| செலவினம் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மதிப்பீட்டு ஏற்பாடு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேறிய ஏற்பாடு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சேமிப்புக்கள் | சேமிப்பு தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | |
| மீண்டெழுபவை | 49,000,000 | 49,000,000 | 278,783 | 0.5 |
| மூலதனம் | 110,000,000 | 111,028,000 | 25,415,745 | 23 |
| கூட்டுத்தொகை | 159,000,000 | 160,028,000 | 25,694,528 | |

**(ii) பாதீட்டு முரண்கள்**

- 03 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 149,800 தொகையான மொத்த தேறிய ஏற்பாடும் எஞ்சியிருந்தது.
- 04 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த காரணத்தால் ஏற்பாடு பயன்படுத்தப்பட்டதை அடுத்து சேமிப்பு ரூபா 13,891,912 ஆகக் காணப்பட்டதுடன் இது அச் செலவின விடயத்திற்கு உரித்தான தேறிய ஏற்பாட்டில் 11 சதவீதத்திற்கும் 78 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சிலான அளவைக் கொண்டிருந்தது.

(ஆ) பொது வைப்புக் கணக்கு

அமைச்சின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொது வைப்புக் கணக்கில் 01 வருடத்திற்கு மேற்பட்ட 02 வருடங்களுக்குக் குறைவான ரூபா 661,613 ஆன மீதி காணப்பட்டது.

## 1.4 நல்லாளுகையும் கணக்களிப் பொறுப்பும்

### 1.4.1 கூட்டிணைந்த திட்டம்

சகல அமைச்சுச் செயலாளர்கள், மாகாண சபை பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி அதிகாரசபைத் தலைவர்களுக்கு விலாசமிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆம் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டிலிருந்து ஆகக் குறைந்தது 03 ஆண்டுகளுக்கான கூட்டிணைந்ததிட்டம் அமைச்சால் ஆண்டின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத் திட்டம் 2012 திசெம்பர் 31 வரையும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**1.4.2 வருடாந்த செயல் நடவடிக்கை அறிக்கை**

மேற்குறித்த 1.4.1 பந்தியில் குறிப்பிடப்பட்ட அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்திற்கு இணங்க 2010 மற்றும் இதனை அடுத்து அமைச்சால் வருடாந்த செயல் நடவடிக்கை அறிக்கை தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்காக செயல் நடவடிக்கைத் திட்டம் 2012 திசெம்பர் 31 வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**1.4.3 வருடாந்த கொள்வனவுத் திட்டம்**

2006 மார்ச் 24 ஆம் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக வருடாந்த கொள்வனவுத் திட்டம் 2012 திசெம்பர் 31 வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை

**1.4.4 உள்ளகக் கணக்காய்வு**

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

**1.4.5 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினைச் செயற்படுத்தல்**

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு செயற்பட்டிருக்கவில்லை.

**1.5 சொத்து முகாமைத்துவம்**

**தீர்க்கப்படாத பொறுப்புகள்**

அமைச்சின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 1 வருடத்திற்குக் குறைவான பொறுப்புகள் ரூபா 6,650,719 ஆகக் காணப்பட்டன.

**1.6 செயலாற்றல்**

2012 வருடாந்த மதிப்பீட்டின் பிரகாரம் அமைச்சின் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

(அ) ஜன செதட சன ஹவுல சமூக மேம்பாட்டு நடமாடும் சேவைகள் 04 இனை நடாத்துவதற்காக ரூபா 2.5 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன்

சமர்ப்பிக்கப்பட்ட சிக்கல்கள் 5,064 ஆல் 3,450 இற்கு தீர்வு வழங்கப்பட்டிருந்ததுடன் 1,614 சிக்கல்களுக்கான தீர்வுகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அரச நிறுவகங்களில் சேவை பெறப்படுகையில் நிலவும் தடைகளைக் குறைக்கும் செயற்திட்டத்திற்காக ரூபா 15 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் இதற்காக ரூபா 1.2 மில்லியன் தொகை மாத்திரமே செலவிடப்பட்டிருந்தது.

**1.7 வங்கிக் கணக்கின் செயற்பாட்டிலான குறைபாடுகள்**

அமைச்சால் 2012 திசெம்பர் மாதத்திற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த வங்கி இணக்கக் கூற்றின் பிரகாரம் 06 மாதங்களுக்கு மேல் ஒரு வருடத்திற்குக் குறைவாக வழங்கப்பட்டு கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிராத காசோலைகளின் பெறுமதி ரூபா 35,839 ஆகக் காணப்பட்டதுடன் இனங்காணப்படாத பெறுவனவுகளின் பெறுமதி ரூபா 210 ஆகக் காணப்பட்டது.

**1.8 மனித வள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளபடியான பதவியணி**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 06 | 05 | 01 |
| (ii) | மூன்றாம் மட்டம் | 17 | 10 | 07 |
| (iii) | இரண்டாம் மட்டம் | 09 | 04 | 05 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 12 | 12 | - |
| | மொத்தம் | 44 | 31 | 13 |